அதன்மூலம் அரசுக்கு எத்தனை கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேசிவைத்துக்கொண்டு கேள்வி கேட்கிறீர்களா? மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 34,000 சதுர மீட்டர் அளவிற்கு அங்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. வருடத்திற்கு 4 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

269—

நகரப் பேருந்து

***435—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, கோ.பவழங்குடி-கட்டியநல்லூர்-கன்னியாங்குப்பம் வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருத்தாசலம் தொகுதி, கோ.பவழங்குடி-கட்டியநல்லூர்-கன்னியாங்குப்பம் வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று விரைவில் இந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.*

2012 மே 15]

திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்திலிருந்து, கோ.பவழங்குடி-கட்டியநல்லூர் வழியாக கன்னியாங்குப்பம் வரை புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பேருந்து வழித்தடம். பல வருடங்களாக மக்கள் இந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் மிக விரைவில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.*

அதுமட்டுமல்லாமல், தடம் எண் 23 பேருந்து மங்களம்பேட்டையிலிருந்து விருத்தாசலம் வழியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்தப் பேருந்து எடச்சித்தூர், சிறுவம்பார், காட்டுப்பரூர் என்ற மூன்று கிராமங்களை இணைத்துச் செல்ல வேண்டும். ஆனால், பல முறை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் டெப்போ மேலாளர் அவர்களிடத்திலும் கோரிக்கை வைத்தோம். அதை ஆய்வு செய்கிறோம்; விரைவில் நிறைவேற்றப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால், அந்த மூன்று கிராமங்களும் மிகப் பெரிய கிராமங்கள். எடச்சித்தூர், சிறுவம்பார், காட்டுப்பரூர் கிராமங்களை விட்டுவிட்டு போய் விடுகிறார்கள். மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் அனைவரும் பாதிக்கப்படுகிறார்கள். இந்தத் தடம் எண் 23 பேருந்தை எடச்சித்தூர், சிறுவம்பார், காட்டுப்பரூர் கிராமங்கள் வழியாக இயக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்படி சொன்ன தடம் எண் 23 பேருந்தை இயக்கிட துறையின் சார்பாக ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன. புதிய பேருந்துகள் வரப்பெற்ற பின்பு, அந்த வழித்தடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்றுப் பேருந்துகள் இயக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*